1981 மே 14] [பேரவைத் துணைத் தலைவர்]

3. தகவல்கோரல்—தொடர்ச்சி

(ஈ) உறுப்பினரின் அறிவிக்கைக் குறித்து.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத்தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். * *

மாண்புமிகு பேவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுப்பதாக இல்லை (குறுக்கீடு) திரு. ஆண்டித்தேவர் இப்போது பேசுவது எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது. இன்றைக்கு 8 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வர இருக்கின்றன. உங்களுக்கு அனுமதியில்லை. ** **

திரு. ரா உமாநாத் : துணைத்தலைவர் அவர்களே, அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட வற்புறுத்தவில்லை; அவர்கள் ஒரு கிளாரிபிகேஷன், கேள்வியாகக் கேட்பதற்கு அனுமதி கொடுக்கலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : இது மிக முக்கியமான பிரச்னை. ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் வெளியிலே பேசிய பேச்சைப்பற்றிய ஒரு குறிப்பை இங்கே கூறுகிறார்கள். ஆகவே, அதற்குத் தகுந்த பதிலை அவர்கள் வெளியிலேயே எடுத்துச் சொல்லலாம். ஆனால் அவர்கள் சொல்லுகின்றபடி, ஜாதிக் கலவரங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. யார் யார் மீது ஜாதிக் கலவரத்தைத் தூண்டினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி அரசு ஆராய்ந்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும். ஆனால் வெளியிலே பேசிய பேச்சுக்கு அரசு இந்த அவையிலே பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத்தான் மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கூறுகிறார்கள். அதற்கான பதிலை திரு. ஆண்டித்தேவர் அவர்கள் வெளியிலே சொல்லலாம். அதுபோல வெளியிலே ஆண்டித் தேவர் பேசிய பேச்சுபற்றியும் இங்கே கொண்டு வர முடியாது. ஆனால் அரசுக்கு இருக்கின்ற பொறுப்பின்படி ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்றபொழுது அதை யார் தூண்டிவிட்டாலும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும் என்ற உறுதி மொழியை நான் தருவதன் காரணமாக திரு. ஆண்டித் தேவர் அவர்கள் அமைதிபெற்று, இந்த அவையின் விதிகளுக்கு இணங்க இந்த அவையினுடைய விதிமுறைகளுக்கு இடம் தரும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவரவர்களே, நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். அவை முன்னவரவர்கள் ஒன்றைச் சொல்லிவிட்டார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். **

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆண்டித்தேவர் அவர்கள் நன்றி சொல்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

* * வேண்டாம். அதை இங்கே அனுமதிப்பதில்லை.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் "(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளில் நீர் வழங்கு திட்டங்கள் பற்றிய பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை);

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை)." ஆகிய அறிக்கைகளை அளிக்கிறேன்.

7, அரசினர் தீர்மானம்.

அ. விதி 54 (6) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54 (6) ஐ இன்று தளர்த்தி 8 பொருள்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று 8 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்து கொள்ள இருப்பதால் ஓர் உறுப்பினருக்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.